RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2124

OPEN ACCESS

# சித்தர் பாடல்களில் கடவுள் சிந்தனை

**ஆ. சந்திரசேகரன் [அ, *]**

[அ] தமிழ் உயராய்வுத் துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்-637205, தமிழ்நாடு, இந்தியா.

# Thoughts about God in Siddha Songs

**A. Chandrasekaran [a, *]**

[a] Department of Tamil, Vivekanandha College of Arts and Science for Women, Elayampalayam, Tiruchengode, Namakkal District-637205, Tamil Nadu, India

* Corresponding Author: drchandrasekaran@vicas.org

Received: 28-08-2022
Revised: 30-09-2022
Accepted: 07-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

Siddhars are unique in the field of Tamil literature and in the history of Tamil religious thoughts. Siddha literature is in Tamil language and is practised largely in Tamil speaking part of India. Innovative ideas about religion can be found in Siddha literature. It is a fact that the history of Tamil literature shows us that although Siddhars performed and prescribed medicine, they also performed ideologies. The Siddhars were clear minded on the principle of God. They are revolutionaries who cannot be contained within specific boundaries. This article examines how the religious thoughts of the Siddhars are different in the multi-religious environment.

**Keywords:** Tamil Literature, Siddha Literature, God, Religious Thoughts

## முன்னுரை

சமயங்கள் தோன்றிய காலத்தை அறுதியிட்டுக் கூற முடியாது. அச்ச உணர்வே சமயத்திற்கும் நேராய் வழிநடத்தியது என்பர். சமயப் பூசல்களும், சமயப் போராட்டங்களும், சமய அநீதிகளும் வளர்ந்து மனிதனை விலங்காகவும் மாற்ற சமயம் காரணியாக அமைந்தது. மனிதன் தன் வாழ்வு வளம் பெறவும், மக்கள் தனிமையிலிருந்து விடுதலை பெற்று மக்கள் தன்மை பெறவும் வழியாகச் செய்யப்பட்டது அல்லது சமைக்கப்பட்டதுதான் சமயமாகும். தனிமனிதனைக் கடந்து உணர்த்தி நிற்கும் அண்டத்தை உணரும் வழிமுறையின் கட்டமைப்பே சமயம் ஆகும். சமயம் என்பது வாழ்வின் பலவகைச் சூழ்நிலைக்கும், ஆன்மிக வளர்ச்சியின் பல்வேறு நிலைக்கும் ஏற்ப மனிதன் தன் நடத்தையை அமைத்துக் கொள்ள உதவியாய் அமைந்த ஒரு கருதுகோள். ஆனால் காலச் சூழலில் சமயங்கள் தங்கள் குறிக்கோளை மறந்து விட்டன. சங்ககாலத்தில் சமயம் பூசலிட்டுக் கொள்ளும் அளவுக்கு வலிமை வாய்ந்த சமூக நிறுவனமாக இருக்கவில்லை. சங்கம் மருவிய காலத்தில் சமணமும் பௌத்தமும் வேத சமயத்தோடு மாறுபட்டவையாக விளங்கின. இதனை மணிமேகலை, நீலகேசி போன்ற காப்பியங்கள் மூலம் அறிய முடியும்.

## கடவுள் இல்லை

வேத சமயத்தார் கடவுள் என்ற ஒன்றை கற்பது, அதனை முன் வைத்துப் பிறப்புக்கு முன்புள்ள வாழ்வையும், இறப்புக்குப் பின்புள்ள வாழ்வையும் விளக்கினர். அவர்கள் இறப்புக்கு பின்புள்ள வாழ்வை

அதிகமாக விவரித்தனர். ஆனால் சமணர்கள் கடவுள் இல்லை என்று குரல் கொடுத்தனர். சமணர் கடவுள் இல்லை என்று தமிழகத்தில் முதல் குரல் கொடுத்த பகுத்தறிவுப் பெரியார்களாகத் திகழ்ந்தனர். சமணர் கருத்துப்படி "உலகம் தெளிவான இரு பிரிவுகளுள் அடங்கும். ஒன்று உயிர், மற்றது உடலும், ஏனைய சடப்பொருள்களும் முன்னது ஜீவன் என்று அழைக்கப்பெற்றது. பின்னது அஜீவன் என்று குறிக்கப்பட்டது" (Aravanan, 2003). சமணர்கள் கடவுளுக்கு வெளியே நின்று சாதிப் பிரிவினைகளை வெறுத்து துறவு வாழ்வுக்கே முன்னுரிமை கொடுத்தனர்.

## சமயக் கொள்கை

திருவள்ளுவருடைய சமயக் கொள்கை பொதுவில் நின்றது எனலாம். இவ்வாறு திருவள்ளுவர், நல்வழிப்படுத்த களப்பிரர் கால வீழ்ச்சியடைந்தது. மாற்றப்பட்டனர். நிகழ்ந்தன. சமணர் முனைந்தாலும் இறுதியில் சமணராயிருந்த மன்னர்கள் தாக்குதலால் சைவ நெறி தொடர்ந்தன. பௌத்தம் வைணவத்திற்கு இவ்வாறு பல்வேறு சமயப் போராட்டங்களும் ஆங்காங்கே நிகழ்ந்த சமணம் தோல்வியடைந்த பின் சைவ நாயன்மார்களுள் ஒருவரான அப்பர் நந்தனையும், திருப்பாணாழ்வாரையும் படைத்து கடவுள் முன் அனைவரும் சமம் என்பதை தெளிவுபடுத்தியது பக்தி இயக்கமாகும். கடவுள் முன் அனைவரும் சமம் எனப் பாடுகிறார். "தொழில் பிரிவினை அடிப்படையில் தோன்றிய சாதிமுறை, ஏற்றத்தாழ்வு பாராட்டும் ஏற்பாடாக வளர்ந்து கொடுமை இயற்றுவதைச் சாடியது பக்தி இயக்கம்" (Ramakrishnan, 2011).

சமயத்தின் தோற்றம் குறித்து குணா கூறும்போது, "சொத்துடைமையின் காவலனாகவே அரசு பிறந்தது. தனிச் சொத்தின் காவல் தெய்வமாகப் பின்னர் அது மருவியது. தேவைப்பட்டன. எனவே, வழிபாடும் பூசையும் பூசாரியும் அதற்குத் குடிகள் அரசனுக்குச் செலுத்திய பங்கை 'இறை' என்றனர். பகைவரிடமிருந்து தங்களைக் காக்க வேண்டிக் குடியுரிமை பெற்றவர்கள் அனைவரும் தங்கள் தலைவனுக்குச் செலுத்தும் பங்காக இது இருந்தது. பின்னர், வலியப் பறிக்கப் பெறும் கொள்ளையாக அது மருவிய காலத்தில் அரசனின் அக்கொள்ளைக்கு நியாயம் கற்பிக்கும் கோவில்களும் பூசைகளும் பள்ளிகளும் மடங்களும் வளர்க்கப்பட்டன" என்கிறார் (Guna, 1979). எனவே மாணிக்கவாசகரும், 'ஒரு நாமம் ஓருருவம்' என சமயப் பொறையை வெளிப்படுத்துகிறார். நாளடைவில் ஜனநாயக ஆன்மீக இயக்கமாகத் தோன்றிய பக்தி இயக்கம் நிறுவனமயமான பின் சாதீய நிலவுடமைக் கொண்ட முடியரசு ஆதிக்கத்துக்குள் வந்து விடுகிறது. இவ்வாறு சமயம் கோயில், சடங்குகள், வழிபாட்டு மரபுகள் என மனித மனத்தோடு இயையாத சடங்கு வடிவமாக மாறிவிடுகிறது. இவ்வாறு பக்தி இயக்கம் தன் நோக்கத்தை மறந்து பின் கோயில்கள் நிலங்களும் சொத்துக்களும் கொண்ட அதிகார நிறுவனமாக மாறியது. மடங்கள் வருண வேறுபாட்டினை காக்கும் புகலிடமாக மாறிவிட்டன.

## பிராமணிய பிரபுத்துவ முறை

பிராமணிய பிரபுத்துவ முறை வலிமையுடையதாக மாறிவிட்டது. இயக்கத்தில் உருவான உயிர்த்துடிப்பானது பக்தி சமூக எழுச்சியாகி, சமூக அநீதிக்கு எதிரானதாக மாறிவிட்டது. புராணப் புனைவுகளுக்கு இடமளித்ததால் பக்தி இயக்கமானது தனது உயிர்த்துடிப்பை இழந்து விடுகிறது. - இவ்வாறு பக்தி இயக்கம் மறைந்த பின் சாதிய பிரபுத்துவ அமைப்பு ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வரும் வரை இந்தச் சமூக அமைப்பானது நெகிழ்ச்சியற்ற நிலையிலேயே உள்ளது. இந்தக் கால உறுதியாக்கப்பட்டது. இறைவனின் இயல்பை எடுத்துரைப்பது, இறையுணர்வு பெறுகின்ற அனுபவத்தைப் பற்றிக் கூறுவது, இறையுணர்வு பெறுவதற்கான வழியையும் பயிற்சியையும் கூறுவது, குருவின் அவசியத்தை உணர்த்துவது என இறையைப் பற்றியச் செய்திகள் சித்தர் பாடல்களில் கூறப்பட்டுள்ளன. மேலும் கடவுளை உணர்வதற்கு சமூகத்தில் உள்ள தடைகளையும் சித்தர் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. இவ்வாறு இறைவனின் இயல்பை கூறும் நேரத்தில் இறைவனைப் பற்றி சமுதாயத்தில் நிலவும் தவறானக் கருத்துக்களை எடுத்துக்காட்டவும் தயங்கவில்லை. "சித்தர்கள் சமய எல்லைகளுக்கு அப்பாற்பட்டவர்கள். மதக் கோட்பாடுகளை ஒரு கருவியாகக் கொண்டு தங்களுடைய

இறையனுபவத்தை உலகுக்கு வழங்கினரேயன்றி மதக் கோட்பாடுகளுக்கு உட்பட்டவர்கள் அல்லர், அவர்களுடைய கோட்பாடுகள் தனி" (Sri Devanaatha Swamikal, 2007).

சமுதாயத்தில் சமய நீதிக்கு எதிரான மூடப்பழக்கவழக்கங்கள், கடவுள் பெயரால் போலித் துறவிகள் அரங்கேற்றும் தீமைகள் இவற்றைக் கடிந்து இவர்கள் கொள்ளும் போக்கும் இவர்களது பாடல்களில் காணப்படுகின்றன. இறைவனது தன்மைகளை மட்டும் கூறிச் செல்லாமல், சமூகத்தில் கடவுள் பெயரால் நடக்கும் தீமைகளையும் எடுத்துக் கூறியிருப்பதால் இவர்களது சமய நீதியைத் தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது. "சித்தர்கள் சமுதாயத்திற்கு செய்த மிகப் பெரிய தொண்டு ஒன்று உண்டு என்றால் அது கடவுள் பற்றிய கொள்கையை விளக்கியமையே ஆகும்" (Murugesan, 2012).

## கடவுள் குறித்த சித்தர் கருத்தியல்

கடவுள் பற்றிய சிந்தனை ஆதியிலே தோன்றியது. அச்சிந்தனை நமக்குள்ளே தங்கி, உள்ளத்தில் இன்பத்தையும் தரவல்லது. அதனால் தான் தெ.பொ.மீ, தமிழரது கொள்கை ஒரு கடவுட் பேராறு. உலகம் தோன்றிய நாள் தொடங்கி, உலகனைத்தையும் தன்னருட் பெருவெள்ளத்தால் மூழ்க்கி, இன்பமூட்டி, அறிவு விளக்கு எளிக்க விரைந்து போந்து, உண்மை முடிவு என முழங்கி, ஓடிவந்து கொண்டிருக்கிறது இந்த கடவுட்பேராறு என்று கூறுகிறார். இந்த கடவுள் குறித்த சிந்தனைகள் சித்தர்களிடம் ஆக்கம் கொண்டு திகழ்ந்ததை அவர்கள் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

## ஒரே கடவுள்

சித்தர்கள் கடவுள் பெயரால் நிகழும் வேற்றுமைகளை ஏற்கவில்லை. அவர்களுடைய கொள்கை ஓரிறைக் கோட்பாட்டைத் தழுவியதாகவே இருந்தது. கடவுளைப் பிரிப்பதால் தான் பிரிவினை ஏற்படுகிறது என்பதைச் சித்தர்கள் நன்குணர்ந்தனர். எனவே,

"ஒருவனென்றே தெய்வத்தை வணங்க வேணும்' என்னும் இப்பாடல் வரியில் அகத்தியர் ஒரே கடவுள் கொள்கையை முத்தொழிலையும் செய்யும் வலியுறுத்துகின்றார். உயிர்களும் சமமே ஆகும். எனவே தான் திருமூலர், இறைக்கு எல்லா

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"

என்று பாடுகிறார் (Ganapathy, 2005).

சிவனும் திருமாலும் ஒன்றே என்பது போலப் பாடும் சிவவாக்கியரின் பாடல்கள் அவரது ஓரிறைக் கோட்பாட்டிற்கு சான்றானவையாகும். சமயங்கள் அவரவர் தெய்வத்தை முன்னிறுத்தி. மக்களை பிளவுப்படுத்த முயலும் போது சமூகநீதிச் சிந்தனையாளர்களாக சித்தர்கள் தோன்றி ஓரிறைக் கோட்பாட்டை வலியுறுத்தினர். சிறுதெய்வம், பெருந்தெய்வம் என ஆளுக்கொரு தெய்வத்தை உருவாக்கி வேறுபடுத்துவதைச் சித்தர்கள் கண்டனம் செய்கின்றனர்.

"ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு"

"அங்குமிங்கு மாகிநின்ற ஆதிமூர்த்தி ஒன்றலோ"

என்ற பாடலும் சித்தர்களின் ஒரே கடவுள் நெறியை வெளிப்படுத்தும் சான்றுகளாகும். அகத்துள் கடவுள் கடவுள் பக்தி என்பது வெளிப்படையானதாக, ஏமாற்றுவதாக, கூட்டம் சேர்ப்பதாக மட்டும் இருக்கக் கூடாது. அது அகத்தில் இறைவனைக் காண்பதாக இருக்க வேண்டும். அது நமக்குள்ளேயே இறையைத்தேடி பயணம் "இறைவன் செய்யும் மனிதருக்குள்ளேயே பயணமாகும். தடையற்ற அவனை கோயில் குளங்களில் போய் தேட வேண்டாம். இருக்கிறான். ஆசைகளை அடக்கி கொண்டால மனதை ஒருமைப்படுத்தி, நமக்குள்ளே உள்ள சக்தியைப் புரிந்து ஆன்ம தரிசனம் சாத்தியமாகி விடுகிறது" என கூறுகிறார் (Ganesan, 1997). சித்தர்களும் இக்கருத்தையே முன்னிறுத்துகின்றனர்.

"அண்ணலாரும் எம்முளே அமர்ந்துவாழ்வது உண்மையே"

என்னும் சிவவாக்கியர் பாடலும்,

“அன்பான பக்தர் அகக்கோயில் காத்தற்கே

இன்பான கோயிலடி குதம்பாய்

இன்பான கோயிலடி” (குதம். 181)

என்னும் பாடலும், பாம்பாட்டிச் சித்தரில்

“தன்னையறிந்து ஒழுகுவார் தன்னை மறைப்பார்

தன்னையறி யாதவரே தன்னைக் காட்டுவார்

பின்னையொரு கடவுளைப் பேண நினையார்"

என்னும் பாடலும் கடவுளை அகத்துக்குள்ளே தேட வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. மேலும் சிவவாக்கியர் தன் உள்ளத்திலே இருக்கும் இறைவனை அறிய முடியாதது தன்னுடைய குறை என்றே கூறுகிறார் (Ganesan, 1997). இதனை,

“என்னிலே இருந்தஒன்றை யான்அறிந்தது இல்லையே

என்னிலே இருந்தஒன்றை யான்அறிந்து கொண்டபின்

என்னிலே இருந்தஒன்றை யாவர்காண வல்லரோ

என்னிலே இருந்திருந்து யான்உணர்ந்து கொண்டெனே"

“தூரம்தூரம் தூரம்என்று சொல்லுவார்கள் சோம்பர்கள்

பாரும்விண்ணும் எங்குமாய்ப் பரந்தஇப் பராபரம்

ஊரும்நாடும் காடும்தேடி உழன்றுதேடும் ஊமைகாள்

நேரதாக உம்முளே அறிந்துஉணர்ந்து கொள்ளுமே"

என்னும் பாடல்கள் வழியாகத் தெளிவுப்படுத்துகிறார். அதாவது ஊர், கோயில், சிவவாக்கியர் மேலும் கடவுளை எங்கும் தேடுவது வீண், நமக்குள்ளே தேட வேண்டும் என்பதை, நாடு, காடு எனத் தேடினாலும் உள்ளத்துக்குள் இருக்கும் இறைவனை உணராமல் அலைவது சரியாகாது என்று கூறுகிறார் (Ganesan, 1997).

வைதீகச் சமயத் தத்துவங்கள் மனித உடலை வேண்டாத பொருளாகவும், சுமையாகவும் சித்திரிக்கின்றன. ஆனால் சித்தர்கள் மனித உடலை இறைமையின் உறைவிடமாகக் கொள்கின்றனர். சித்தர்களின் சிந்தனை உடலைப் புனிதத்திற்குரியதாகக் காட்டுகிறது

## சித்தர்களின் சமயநெறி

உள்ளத்தில் உறையும் இறைவனைத் தேடாமல் காடு, மலை, மேடுகளில் கடவுளைத் தேடுவதால் பயன் இல்லை என்பது சித்தர்களின் கருத்தாகும். எங்கும் எதிலும் கடவுள் சித்தர்கள் அனைவரும் ஒரேவிதமான கடவுள் கொள்கை உடையவர்கள் விளக்கங்களில் வேறுபாடுகளும் பாடியுள்ளனர்.

சித்தர்கள் சமயநெறிமுறைகளை ஏற்றும், மறுத்தும் கடவுள் நீக்கமற எங்கும் பொருட்களிலும் நிறைந்திருப்பதையும், அதன் அழியாத் தன்மையையும் சித்தர் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. சித்தர் பாடல்களில் இறைவனைக் குறிக்கும் சொற்களில் 'வெளி', 'வெட்டவெளி' என்னும் சொற்கள் மிகுதியாக இடம் பெறுகின்றன. சித்தர்கள் குறிப்பிடும் வெட்டவெளி என்பது வேறுபாடற்ற எல்லையற்ற பரம்பொருளின் பேரறிவைச் சுட்டுவதாக இருக்கின்றது.

“இவ்வெட்டவெளி என்பது கால இடக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்ட திறந்தவெளிப் பரிமாணம் காட்சிகளுக்கோ, ஒரு பாடல்களிலும் உரைக்கின்றன. அதுவே என்றும் எனலாம். அங்கு கருத்துக்களுக்கோ, தரப்படுத்தி வகைப்படுத்துவதற்கோ இடமில்லை” என்று குறிப்பிடுகிறார் (Idayaraj, 2011). இச்சொல் பொதுவாக எல்லாச் சித்தர் காணப்படுகிறது.

'மெய்ப்பொருள்' "வெட்ட வெளிதன்னை மெய்யென் றிருப்போர்க்குப் பட்டய மேதுக்கடி குதம்பாய் பட்டய மேதுக்கடி"

"வெட்டவெளிக்குள் வெறும்பாழாய் நின்றதை

இட்டமாய்ப் பார்ப்பாயடி குதம்பாய்

இட்டமாய்ப் பார்ப்பாயடி"

என்னும் குதம்பைச் சித்தரின் பாடல்கள் வெட்டவெளி பற்றி குறிக்கின்றன. கடுவெளிச்சித்தர் ஆகியோரும் வெட்டவெளி பற்றி கூறுகின்றனர். டி.என்.கணபதி வெட்டவெளி பற்றி “வெட்டவெளி என்பது பேரின்பம். அது விடுதலை விளையும் நிலம். அது எங்கும் நிறைந்து கிடக்கிற இருப்பு" (Ganapathy, 2005).

என்று கூறுகிறார். இறுதியாக வெட்டவெளி என்பது இறைவனின் பாகுபாடற்ற சமயம் கடந்த நிலையையும் குறிப்பதாக இருக்கிறது. தன்மையையும், இவ்வாறிருக்கும் கடவுள் இந்த உலகில் எங்கும் நீக்கமநிறைந்திருப்பதாகச் சித்தர்கள் கூறுகின்றனர். மேலும் இந்த உலகிலுள்ள எல்லாப் பொருளுமாக நிறைந்திருப்பவனும் இறைவனே ஆவான். இதனை சிவவாக்கியர்,

“மண்ணும்நீ விண்ணும்நீ மறிகடல்கள் ஏழும்நீ

எண்ணும்நீ எழுத்தும்நீ இசைந்தபண் எழுத்தும்நீ

கண்ணும்நீ மணியும்நீ கண்ணுள்ஆடும் பாவைநீ

நண்ணும்நீர்மை நின்றபாதம் நண்ணுமாறு அருளிடாய்"

மேலும் எள்ளுக்குள் எண்ணெய் போல இறைவன் எங்கும் வியாபித்திருக்கிறார் என இடைக்காட்டுச் சித்தர் கூறுகிறார் (Ganapathy, 2005).

“எள்ளில்தை லம்போல எங்கும் நிறைபொருளை

உள்ளில் உதித்தே யுணர்வடைந்து போற்றீரே"

இவ்வாறு எங்கும் நிறைந்த கடவுளைச் சித்தர்கள் விவரித்துள்ளனர் (Ramakrishnan, 2011).

சித்தர்கள் கடவுள் பெயரால் வேற்றுமை பாராட்டுவதை எதிர்த்தனர், சித்தர்களின் பாடல்களில் மதங்களில் ஒன்றை உயர்த்தி பிறவற்றைத் தாழ்த்திப் பாடும் பண்பு காணப்படவில்லை;. மேலும் கடவுள் இவ்வுலகில் எங்கும், எல்லாப் பொருளுமாக இருப்பதை ஒளி, இருள், நீர், நெருப்பு, காற்று, வானம், நிலம் என கடவுள் எல்லாமாக இருக்கிறார் (Ramakrishnan, 2011). இதனை, குதம்பைச்சித்தர் பதிவு செய்கிறார்.

"உருவாகி அருவாகி ஒளியாகி வெளியாகித்

திருவாகி நின்றதுகாண் குதம்பாய்

திருவாகி நின்றதுகாண்

நீரும் நெருப்பும் நெடுங்காற்று வானமும்

பாருமாய் நின்றதைக்காண் குதம்பாய்

பாருமாய் நின்றதைக் காண்"

என்னும் பாடல் வரிகள் உறுதி செய்கின்றன (Ramakrishnan, 2011). தாய்க்குச் சமமான அன்பு கொண்ட கடவுளைச் சார்ந்து வாழ வேண்டும் என்பதை,

"தாய்க்குச் சரியான தற்பரம் சார்ந்திடில்

வாய்க்கும் பதவியடி குதம்பாய்

வாய்க்கும் பதவியடி"

என்றும் கூறுகிறார் (Murugesan, 2012). இவ்வாறு ஓரிறைக் கோட்பாடுடைய சித்தர்கள் சமயம், மதம் என்னும் நிலைகளைத் தாண்டி எங்கும், எல்லாமுமாய் அன்பு காட்டுபவராய் கடவுள் இருக்கிறார் என்கிற கருத்தைத் தெளிவுபடுத்துகின்றனர்.

## சமய வேற்றுமைகளும் சித்தர் நிலைப்பாடும்

சித்தர்கள் சமய வேற்றுமைகளுக்கு இடம் கொடுத்தவர்கள் அல்லர் என்பது அவர்தம் பாடல்கள் வழிப் புலனாகிறது. கடவுளின் தன்மையையும், நிலைப்பாட்டையும் விவரித்தனரே தவிர சமயத்தின் பெயரால் பிரிவினைகள் வருவதை ஆதரிக்கவில்லை. தமிழகச் சித்தர்களும் சீர்திருத்தம் பேசி மக்களுக்கு நல்வழி காட்டினார்கள். சமயங்களின் அடிப்படைக் கொள்கைகளிலிருந்து சமரச ஒருமைப்பாடு கண்டனர் என் சாரங்கபாணி கூறுவதிலிருந்து இதை அறிய முடியும். இருக்கும் சமுதாயத்தின் ஒற்றுமைக்கும், சமூகநீதிக்கும் தடையாக மனிதனை காரணிகளுள் சமயப் பிரிவினைகள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஒன்றிணைக்க வேண்டிய சமயங்கள் மனிதனைப் பிரித்து பிளவுபடுத்துவதால் சமயத்தின் பெயரால் அடிதடிகளும் அரங்கேறுகின்றன.

மனிதனை தோற்றுவிக்கப்பட்டு நிறுவன நெறிப்படுத்துவதற்காகத் வடிவம் பெற்றபின் சமயம். நெறிபிறழ்ந்து சென்றது நீதிக்கு முக்கியத்துவம் கொடுத்த சித்தர்கள், சமயங்களை நெறிப்படுத்தப் பாடல்களைப் பாடினர். எனவே சமயத்தின் பெயரால் மனிதர்களுக்குள் இறையைக் கண்டவர்கள். நடைபெறும் பேதங்களைச் கடிந்துரைத்தனர். சைவ வைணவ சமரசம் சைவ வைணவ சமயங்கள் தங்களுக்குள் புராணக் கதைகளை சமயங்கள் உருவாக்கிக் கொண்டு தங்கள் சமயமே உயர்ந்தது என்றும், தங்கள் கடவுளே உயர்ந்தவர் என்றும் பேதம் கொண்டு பூசல்கள் ஏற்படுத்திக் கொண்டிருந்தன. அக்காலக் கட்டத்தில் சித்தர்களும் சைவ வைணவ சமரசத்திற்காகக் குரல் கொடுத்தனர். சிவவாக்கியர் காலத்திலும் இப்பிரிவினை இருந்தது. பிரிவுகளுக்குள் பிரிவாக குழப்பங்களையும் பூசல்களையும் ஏற்படுத்திக் கொண்டிருந்த பொழுது அவற்றைப் போக்கி சமுதாய அமைதியை நிலைநாட்டும் பொருட்டுச் சித்தர்கள் சமய சமரசக் குரல் எழுப்பினர்.

"எங்கள்தேவர் உங்கள்தேவர்

என்றிரண்டு தேவரோ

இங்குமங்கு மாய்இரண்டு தேவரே

இருப்பரோ அங்குமிங்கு மாகிநின்ற

ஆதிமூர்த்தி ஒன்றலோ வங்கவாரம்

சொன்னபேர்கள் வாய்புழுத்து மாள்வரே"

என்னும் சிவவாக்கியர் பாடல் இரண்டு தெய்வமில்லை, எல்லா சமயங்களும் சொல்லும் ஆதி தெய்வம் ஒன்றுதான், அறியாத மக்கள் பேதம் கொண்டு சண்டை இட்டு மாள்கிறார்கள் என்று கூறிச் சண்டையிடுவாரைச் சாடுகின்றது. சிவவாக்கியர் பாடல்களில் சமய நீதியை வலியுறுத்தும் பாடல்கள் பல காணப்படுகின்றன (Murugesan, 2012).

## முடிவுரை

சமயத்தை சமுதாயத்திலிருந்து பிரித்ததுதான் இன்றைய அவலங்களுக்கு முக்கியக் காரணம் என உணரும் சமயச் சான்றோர், சமயங்களைச் சமுதாய மாற்றத்திற்குக் கருவியாக்க வேண்டுமென கருத்து தெரிவிக்கின்றனர். சித்தர்களும் இத்தகைய கருத்தோடு தான் பாடல்களைப் பாடியுள்ளனர். சடங்குகளையும், சாத்திரங்களையும் கடுமையாக கண்டிக்கும் சித்தர்கள் சமய வேற்றுமைகளை மறந்து மானிடர் ஒன்றுபட்டு வாழ வழி கூறியுள்ளனர்.

## References

Aravanan, K.P. (2003) Tamilar Ilakkiya samooga thalangal, Tamil kottam, Chennai, India.

Ganapathy, (2005) Tamil Sidhar Marapu, Ravi Pathippagam, Chennai, India.

Ganesan, P.C. (1997) Sidharkalin Paarvaill Valviyal Sindhaikal, Manomaniyam Sundaranaar University, Tirunelveli, India.

Guna, (1979) Sathiyathin Thotram, Thendral Pathippagam, Chennai, India.

Idayaraj, S.J. (2011) Sidharkalin Paarvaiyil Valviyal Sindhaikal, Manomaniyam Sundaranaar University, Tirunelveli, India.

Murugesan, C.S. (2012) Sidharkal Kanda Iraimai, Sankar Pathippagam, Chennai, India.

Ramakrishnan, (2011) Samaiya Valviyal, Vadakum Thrkum, New Century Book House, Chennai, India.

Sri Devanaatha Swamikal, (2012) Sidharkal kanda Iraiyamai, Sankar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License